இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 279 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 07 – வியாழக்கிழமை 21 மே 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 279 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 07 - Thursday 21 May 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## பொய்த் தகவல்களைப் பரப்பும்

# த.வெ.க.வினரின் பித்தலாட்டங்கள்!

## ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தும் 'தி இந்து'!

**சென்னை, மே 21 -**

**மக்களிடம் திட்டமிட்டு தவறான பொய் தகவல்களை த.வெ.க.,வினர் பரப்பி வருவதாக 'தி இந்து' ஆங்கில நாளேடு விமர்சித்துள்ளது. மேலும், த.வெ.க.,வினரின் பித்தலாட்டத்தையும் ஆதாரங்களோடு அந்த நாளேடு அம்பலப்படுத்தியுள்ளது.**

ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் விஜய் மற்றும் த.வெ.க. பற்றிய செய்திகளே வர வேண்டும் என Narrative செட் செய்து பொய்த் தகவல்களை த.வெ.க. பரப்பி வருகிறது. ஒவ்வொரு மணிநேரத்திற்கு ஒருமுறை, ஊடகங்களில் விஜய் மற்றும் த.வெ.க. பற்றிய செய்திகளே வர வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு பொய் தகவல்களை பரப்புகின்றனர்.

இந்நிலையில், சமூக வலைதளங்கள் மூலம் மக்களிடம் திட்டமிட்டு தவறான தகவல்களை பரப்பி த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாக ஆதாரங்களோடு 'தி இந்து' ஆங்கில நாளேடு குற்றம்சாட்டியுள்ளது. த.வெ.க. வேட்பாளர்கள் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும், கோடீஸ்வரர்களாக உள்ளனர் என்பது அவர்களது வேட்புமனுவிலேயே உறுதி செய்யப்பட்டிப்பதாகவும் 'தி இந்து' ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

**அப்பட்டமான பொய்ச் செய்தி!**

தமிழ்நாட்டில் த.வெ.க., ஆட்சியில் தான் முதன்முறையாக பெண் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது அப்பட்டமான பொய் என்று 'தி இந்து' சாடியுள்ளது.

தமிழ்நாட்டில் பெண் முதலமைச்சர்கள், பெண் அமைச்சர்கள் பதவியில் இருந்துள்ளார்கள் என்றும், முந்தைய தி.மு.க. ஆட்சியில் கீதா ஜீவன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் அமைச்சர்களாக இருந்தனர் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

த.வெ.க.,வினரின் தேர்தல் பிரமாண பத்திரங்கள் மூலம் பல்வேறு தகவல்கள் வெளிவந்துள்ளன என்றும் த.வெ.க., வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் கோடீஸ்வரர்கள் என்பதும் தற்போது தெரியவந்துள்ளது

த.வெ.க., வேட்பாளர்களுக்கு கோடிக்கணக்கான சொத்துக்கள் உள்ளன. த.வெ.க., வேட்பாளர்களுக்கு உயர் ரக கார்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. எனவே தங்களை சாமானியர்கள் என்று தொடர்ந்து பொய்ச் செய்திகளை த.வெ.க.,வினர் பரப்ப வேண்டாம். த.வெ.க.,வினர் என்ன பொய் சொன்னாலும், அவர்களின் தேர்தல் பிரமாண பத்திரங்களே அதனை அம்பலப்படுத்திவிடும். த.வெ.க.வினர் கோடீஸ்வரர்கள் என்பது தேர்தல் ஆணையத்தில் அவர்கள் தாக்கல் செய்த தேர்தல் பிரமாண பத்திரங்களே சொல்கிறது.

**தமிழ்நாட்டில் 2 பெண் முதலமைச்சர்கள்!**

த.வெ.க.,வினர் பேசிய ஒவ்வொன்றையும் மக்கள் நினைவில் வைத்துள்ளனர். ஒருபோதும் மறக்கமாட்டார்கள். அதை தமிழ்நாட்டில் த.வெ.க., அரசில் தான் முதன்முறையாக பெண் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்ற பொய் தகவலை பரப்பியுள்ளனர். தமிழ்நாட்டில் ஜெயலலிதா, ஜானகி ராமச்சந்திரன் ஆகிய 2 பெண் முதலமைச்சர்கள் இருந்துள்ளனர். ருக்மணி லட்சுமிபதி, ஜோதி வெங்கடாசலம், லூர்தம்மாள் சைமன், சத்தியவாணி முத்து ஆகியோர் தமிழ்நாட்டின் பெண் அமைச்சர்களாக இருந்து ள்ளனர். வளர்மதி, கோகுல இந்திரா, கீதா ஜீவன், கயல்விழி செல்வராஜ் ஆகியோரும் தமிழ்நாட்டின் பெண் அமைச்சர்களாக இருந்துள்ளனர் என 'தி இந்து' நாளேடு கூறியுள்ளது.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (19.5.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இளைஞர் காங்கிரஸ் கட்சியின் மாநில முன்னாள் பொதுச் செயலாளர் அலீம் அல் புகாரி தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யமொழி, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இளைஞர் காங்கிரஸ்

# மாநில முன்னாள் பொதுச் செயலாளர் அலீம் அல் புகாரி கழகத்தில் இணைந்தார்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

சென்னை, மே 21 -

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (19.5.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இளைஞர் காங்கிரஸ் கட்சியின் மாநில முன்னாள் பொதுச் செயலாளர் அலீம் அல் புகாரி தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யமொழி, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## எல்லோரையும்

# எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, மே 21 -**



**பொய்த் தகவலை பரப்பும் த.வெ.க.வினரின் பித்தலாட்டங்கள் தொடர்பான 'தி இந்து' நாளேட்டில் வெளியான செய்தித் தொகுப்பினை மேற்கோள் காட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கீழ்க் கண்டவாறு தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

அது வருமாறு :-

"பலரைச் சில காலம் ஏமாற்றலாம்.

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம்.

ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது!"

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் மீது வீடுபுகுந்து தாக்குதல்!

# சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்திடுவீர்!

## மாநில அரசுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வலியுறுத்தல்!

**சென்னை, மே 21 -**

**முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளரை வீடுபுகுந்து தாக்கியதை கண்டிப்பதோடு, தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணி காத்திட புதிய அரசு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-



திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் வீட்டிற்குள் புகுந்த மர்ம கும்பல் ஒன்று அவரை சரமாரியாகத் தாக்கியுள்ளது.

படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள அவர், சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்கும் இது போன்ற அச்சுறுத்தல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை தி.மு.க. சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

ஊடகங்களை ஜனநாயகத்தின் நான்காவது தூணாக மதிக்க வேண்டும் என்பதுடன், பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்பட விடாமல், அச்சுறுத்தி அவர்களின் எழுத்துரிமை மற்றும் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படுவதை தி.மு.க. என்றைக்கும் ஏற்றதில்லை.

**பத்திரிகைச் சுதந்திரத்தை பேணிக் காத்திடுவீர்!**

பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் மீது புதிய அரசு சட்டப்படி கடும் நடவடிக்கை எடுத்து அதன் மூலம் தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணிகாத்திடுவது அரசின் கடமை என்பது உணர்ந்து, முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் வீட்டிற்குள் புகுந்த மர்ம கும்பல்மீது புதியதாக பொறுப்பேற்றுள்ள மாநில அரசு கடுமையான நடவடிக்கை எடுத்திட வேண்டுமென தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

# 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் 94.31 சதவீதம் மாணவர்கள் தேர்ச்சி!

*சென்னை, மே 21 -*

*2025 - 2026ம் கல்வி ஆண்டுக்கான 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.*

*சென்னை கோட்டூர்புரம், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ளது.*

*தமிழகத்தில் 12,467 பள்ளிகளில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களில் 8,21,105 மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளனர். இதனால் பொதுத்தேர்வில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளனர்.*

*வழக்கம் போல் மாணவிகளின் தேர்ச்சி விகிதம் அதிகம். 96.47 சதவீதம் மாணவிகளும், 92.15 சதவீதம் மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.*

*இந்நிலையில் பொதுத் தேர்வில் வெற்றி பெற இயலாதவர்களுக்கு மறுதேர்வு ஜூலை 8ந்தேதி முதல் 15ந் தேதி வரை நடைபெறும் என்றும் அரசு அறிவித்துள்ளது.*

*மாணவர்களுக்கான மதிப்பெண் சான்றிதழ் வரும் 22ந்தேதி முதல் வழங்கப்படும் எனவும் பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.*